
# அரண்

பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்

(Peer Reviewed - Journal Multidisilinary)

ISSN: 2582-399X



காலாண்டு இதழ்
(ஜனவரி, ஏப்ரல், ஜூலை, அக்டோபர்)
ஆகிய மாதங்களில் வெளிவரும்

*Vol:7 Issue :25 January 2025*

கோட்டை:7 வாயில்:25 ஜனவரி 2025

அரண்

பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்

Aran

*International e Journal of Tamil Research*

# EDITORIAL BOARD

Founder / Editor in Chief

**Dr PRIYAKRISHNAN**

Publisher

**MR P. JAYAKRISHNAN**

Editorial Board Members

**Dr V SELVAKUMAR**

Professor And Head of The Department of Maritime History and Marine Archaeology Tamil University, Thanjavur, TamilNadu, India
selvakumar.v@tamiluniversity.ac.in

**Dr. S. KAVITHA**

School of Indian Languages and Comparative Literature,Tamil University, Thanjavur. TamilNadu, India

**Dr.K.DAYANIDHI**

Assistant Professor & Head i/c , Department of Vaishnavism , University of Madras, TamilNadu, India. dayanidhi@unom.ac.in

**Dr O.MUTHIAH**

Professor of Tamil, The Gandhigram Rural Institute (Deemed to be University) Gandhigram - 624 302 Dindigul District, TAMIL NADU

**DR UMADEVI**

Professor In Tamil, Department of Modern Indian Languages And Literery Studies University of Delhi,Delhi . dumadevi@mil.du.ac.in

**DR JAGADEESAN.T.**

Assistant Professor of Tamil, Department of Indian Languages, Faculty of Arts, Banaras Hindu University,Varanasi- 221005, Uttar Pradesh,India.

**DR SENTHIL PRAKASH.S**

Teacher – in- charge/Assistant professor (SG),Department of Tamil, Institute of Languages, Literature& culture, Visva – Bharathi University,Santiniketan,West Bengal, India -731235

Copy Right @ Aran international e journal of Tamil Research/Dr.Priyakrishnan

அரண்

பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்

Aran

*International e Journal of Tamil Research*



# EDITORIAL BOARD

**DR R TAMILSELVAN**

Assistant professor, Aligarh Muslim University, Uttar Pradesh,India-202002

**Dr SWARNAVEL ESWARAN**

Associate Professor Departments of English, and Media and Information
Michigan State University. USA. eswaran@msu.edu

**Dr SILLLALEE A/L S.KANDASAMY**

Assistant Professor University Tunku Abdul Rahman (UTAR), Sungai Long,
Cheras, Selangor, Malaysia. sillalee@utar.edu.my

**Dr (Ms.) NILANKA LIYANAGE**

Senior Lecturer in Dance ,Department of Dance,Drame&Theatre Arts,
Swamy Vipulananda Institute of Aesthetic Stidies,Eastern University Srilanka

**Mrs THULSIVANTHANA UDAYASHANKAR**

Senior lecturer Gr II in English, Swamy Vipulananda Institute of
Aesthetic Stidies ,Eastern University, Srilanka

**Dr N.MUTHUMANI**

Principal, PPG College of Arts And  Science,Coimbatore - 641035.

**Dr KANDASAMY**

Asst Professor Department of History, Rajus college
Rajapaalayam Madurai Tamil nadu herostone78@rrc.edu.in

**Dr S. KARUMPAAYIRAM**

Junior Research officer,Central Institute of Classical Tamil,Chennai-600100

**Dr B. DHANANJAYAN**

Associate Professor, Sir Theagaraya College, Old Washermenpet,
Chennai - 600 021.

# அரண்

# Aran

பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்

*International e Journal of Tamil Research*


## EDITORIAL BOARD

**Dr S.KANNADASAN**

Assistant Professor,Tamil Department,The Madura College, Madurai.
Kannadasan@maduracollege.edu.in

**Dr P.SEKAR**

Assistant Professor,Department of Education,Govt.Institute of Advanced Study in Education,Saidapet,Chennai-600015.sekar@iasetamilnadu.ac.in

**DR G.UMAMAHESWARI**

Asst professor and Head , Department of Tamil , P. K. R Arts college for women , Gobichettipalayam , Erode (Dt) , umag@pkrarts.org

**Dr CHANDRAKALA**

Asst Professor and Head, Department of Tamil , PPG college of Arts and Science, Coimbatore - 641035.

**நிறுவனர்/பதிப்பாளர்/நிர்வாக ஆசிரியர்**

**இதழாக்கம்**

**திரு ப. ஜெயகிருஷ்ணன்**

**முதன்மை ஆசிரியர்**

**முனைவர் பிரியாகிருஷ்ணன்**

**+917299587879**

www.aranejournal.com

aranjournal@gmail.com

அரண் பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழில் வெளிவரும் ஆய்வுக்கட்டுரைகள் அனைத்தும் (Peer Review)பீர் ரிவியூ செய்யப்பட்டு பதிவு செய்யப்படுகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

# அகத்தினுள்

**அகப்பொருள் மரபுகளின் பொருண்மைகள்**
**தெ.மதுபாலா**

**தற்காலப் பயன்பாட்டில்  தன்மை வினைமுற்றுச் சொற்கள்**
**கோ. கோகிலா**

**தொல்காப்பியச் சொல்லதிகார உரையாசிரியர்கள் சிறந்த ஆசிரியர்கள்**
**முனைவர்.வி.சேகர்**

**ஐங்குறுநூற்றில் மருத நில வாழ்வியல் கோட்பாடு**
**கோ. கோகிலா**

**ஐங்குறுநூற்று மருதத்திணையில் "வேட்கைப் பத்து" வெளிப்படுத்தும் செய்திகள்**
**த.கல்பனா**

**சங்க இலக்கிய அகப்பாடல்களில் தோழியின் உளவியல் கூறுகள்**
**கு.கலையரசி**

**ஆற்றுப்படை இலக்கியத்தில் ஐந்திணைசார் உணவுகள்**
**மு.கௌசல்யா**

**சங்க இலக்கியங்களில் சமூக உறவுகள்**
**முனைவர் வெ. நளினி**

**பறம்பு மக்களின் பரந்த வாழ்வியல்**
**வீ. மஞ்சு**

**குறுநில மன்னா ̇களின் பொருளாதாரநிலை**
**மு. சதீஸ்குமார்**

**கம்பராமாயணம் காட்டும் வாலிவதைப்படலம்**
**மு.கனகவள்ளி**

**காப்பியங்களில் மரபுக்கருவிகள்**
**வீ.விஜயலட்சுமி**

**அட்டைப்படம் உதவி**
**இணையம்**

**நன்றி**

# அகத்தினுள்


**இஸ்லாமிய சூஃபித்துவமும் சடங்கு முறைகளும்**
முனைவர் சா.இன்குலாப்

**தேவிபாரதியின் "உயிர்த்தெழுதலின் சாபம்" சிறுகதையில் பெண்மன நிலைபாடு**
S.Priyadharshini

**விமணியின் குழந்தைச் செல்வம் படைப்பு - ஒரு பார்வை**
முனைவர் கு.புஷ்பாவதி

**அண்ணாவின் நாடகப் பனுவல்கள் மற்றும் நிகழ்த்துகைகளில் அவரது மறுமலர்ச்சி விடுதலை அரசியல் அரங்கு ஓர் ஆய்வு.**
திரு.கு.ரவிச்சந்திரன்

**பாரதிதாசனின் பெண்ணுலகம்**
கா. கவிதா

**பாரதியார் படைப்புகளில் பெண்ணியச் சிந்தனைகள்**
நா.ரஹமத் நிஷா

**"தோட்டியின் மகன்" நாவல் காட்டும் துப்புரவு தொழிலாளர்களின் வாழ்வியல் நிலை**
மு. வசந்தி

**நூற்றாண்டு கண்ட எழுத்தாளுமை இராஜம் கிருஷ்ணன்-பெண்ணின் குரலாய்**
முனைவர் ப.விமலா அண்ணாதுரை

**கே.ஆர்.மீராவின் புதினங்களில் வெளிப்படும் பெண்மொழி**
நா.சௌந்தர்யா

**Creating Virtual Platforms to Showcase Undergraduates' Artworks**
1.Yasanthini, G.F



அட்டைப்படம் உதவி
இணையம்
நன்றி

# அகத்தினுள்

இலக்கியங்களிலும் கல்வெட்டுகளிலும் அரசன்
முதுமுனைவர் பிரியாகிருஷ்ணன்

Lakśana and Lakśya in Music
Srivaramangai Sadagopan

சதாசிவ ப்ரம்மேந்திரரின் இசை உருப்படிகளில் பகவத்கீதையின் ஸாராம்ஸம்
ச. காயத்ரி தேவி

Importance of Sāhityam and the Influence of the Great composers in the musical compositions
Ms. Janaki Sadagopan

தெலுங்கும் தமிழும் தித்திக்கும் கலைவடிவம் பாகவதமேளா ஓர் ஆய்வுநோக்கு
கலாநிதி தாக்ஷாயினி பரமதேவன்

தமிழ்நாட்டின் மரபுவழி நிகழ்த்துகலையான தெருக்கூத்து
கலாநிதி. ஷார்மிலளா றஞ்சித்குமார்

திருமந்திரத்தில் காணப்படும் உடல்சார் கருத்துகள் நவீன அறிவியல் பார்வை
பேராசிரியர் முனைவர் சு.ஹரிபிரசாத்

அட்டைப்படம் உதவி
இணையம்
நன்றி


தமிழ்

## "தோட்டியின் மகன்" நாவல் காட்டும் — துப்புரவு தொழிலாளர்களின் வாழ்வியல் நிலை

## *Thottyin Magan Novel Shows the Living conditions of the Sanitation workers*

**ஆய்வாளர்**
மு. வசந்தி,
முதுகலை தமிழ் இலக்கியம் இரண்டாமாண்டு,
சக்தி மகளிர் கலை மற்றும்
அறிவியல் கல்லூரி,
ஒட்டன்சத்திரம்.

**நெறியாளர்.**
கி.ஜோதிமணி DTED.,M.A.,B.Ed.,M.Phil.,(Ph.D.) ,
உதவிப் பேராசிரியர்.தமிழ்த்துறை,
சக்தி மகளிர் கலை மற்றும்
அறிவியல் கல்லூரி,
ஒட்டன்சத்திரம்.

**ஆய்வுச்சுருக்கம்**

நாவல் என்பது எழுதப் படும் ஒரு நீண்ட புனைகதை ஆகும். இது ஒரு கதை உலகத்தை உருவாக்கி, அதில் நிகழும் நிகழ்வுகளையும், கதாபாத்திராங்களின் வளர்ச்சியையும் விவரிக்கிறது. தகழி சிவசங்கர பிள்ளை இயற்றிய " தோட்டியின் மகன்" என்னும் மலையாள நாவலை "சுந்தர ராமசாமி" என்பவர் தமிழில் மொழி பெயர்த்தார்.

இந்நாவல் தோட்டி சமூகத்தை சார்ந்த மக்கள், எதிர்கொள்ளக்கூடிய பொருளாதாரம். கல்வி, சமூக ஏற்றத்தாழ்வு, சாதி சிக்கல்களை மையமாக வைத்து படைக்கப்பட்டு உள்ளது. இதனை ஆய்வு செய்வதே இக்கட்டுரையின் நோக்கம் ஆகும்.

**திறவுச் சொற்கள்**

தலித் சமூக அமைப்பு, தோட்டிகளுக்கு ஏற்படும் சிக்கல்கள்,தோட்டிகளின் சமுதாய நிலை, கல்வியில் தலித் மக்களின் நிலை,இன்றைய சூழலில் துப்புரவாளர்களின் நிலை

**முன்னுரை**

"தோட்டியின் மகன்" எனும் நாவல் இலக்கியத்தில் மட்டும் அல்லாது, சமூகப் பார்வையிலும் அதிர்வுகளை ஏற்படுத்தியது. இலக்கியத்தில் யாரும் பார்க்காத களம், சேரி மக்களின வாழ்க்கை, பாமர மக்களின் பேச்சு வழக்குகள் தோட்டியின் உழைப்புகள், உணர்வுகள், வெளிப்பாடுகள், போராட்டம் போன்றவற்றை எடுத்து இயம்புகிறது.

அன்றாட வாழ்வில் தோட்டிகளுக்கு ஏற்படும் சிக்கல்கள், தோட்டிகளின் சமுதாய நிலை, அவர்களின் கல்விநிலை, இன்றைய சூழலில் துப்புரவாளர்களின் நிலை ஆகியவற்றை எடுத்துரைப்பதே இக்கட்டுரையின் நோக்கம் ஆகும்.

**அன்றாட வாழ்வில் தோட்டிகளுக்கு ஏற்படும் சிக்கல்கள்:**

தலித் மக்கள் அன்றாட வாழ்வில் பலவிதமான சிக்கல்களுக்கு ஆட்பட்டு வாழ்ந்து வருகின்றனர்.அன்றாட தேவைகளை கூட அவர்களால் பூர்த்தி செய்ய முடியவில்லை.

நோய், வறுமை, பணச்சிக்கல், ஊதியத்தின் போதாமை என பல விதமான பிரச்சினைகளை தங்களுடனே சுமக்கின்றனர்.

அதனை,

"இன்மையின் இன்னாதது யாதெனின் இன்மையின்
இன்மைவே இன்னா தது" (குறள் 1041)

என்ற குறள் இன்மையில் தலை சிறந்தது ஏனெனில் வறுமை என திருவள்ளுவர் கூறுகின்றார். இளமையில் வறுமை மிகக் கொடுமை என்றார் ஔவையார். கீழ்தட்டு மக்களின் வறுமையை தங்களுக்கு சாதகமாக்கி கொண்டனர் அதிகார வர்க்கத்தினர். அரசியல்வாதிகளாலும் ஆதிக்க வர்க்கத்தினாலும் ஊனமாக்கப்பட்டனர் தலித் மக்கள். அவர்கள் மேல் தட்டினருக்கு சேவகம் செய்வதிலேயே தங்களின் வாழ்நாளைக் கழிக்கின்றனர்.

"இச்சூல்நிலையில் துப்புரவு தொழிலாளர்களுக்கு வைசூரி என்னும் நோய் ஏற்படுகிறது. முதலில் சுப்பு என்பவன் மனைவியை தாக்கியது. அப்போது அவனுக்கு மனைவியை காப்பாற்ற கூட பணம் இல்லை அதனால் தன் மனைவியே இழந்தான்". அக்குடும்பத்தில் உள்ளவர்களும் நோய்க்கு ஆட்பட்டு தெரு தெருவாக அழைந்தனர். தன் பிள்ளைகளுக்கு உண்ண உணவும் உடுத்த உடையும் இல்லாமல் தவித்தனர். தங்களின் அன்றாடத் தேவைகளுக்கு கூட பணம் இன்றி தவித்தனர்.

"வறுமையின் காரணமாகவும், செல்வர்களின் சுயநலமிக்க தீய செயல்களினாலும் நாளும் சமூகத்தின் அடிமட்டத்து ஏழை மக்களின் இல்லற வாழ்க்கை சிதைகின்ற அவலங்களை தகழி தம் நாவல்களில் சித்தரிக்கின்றார். குடும்ப சிதைவுகளுக்கான காரணத்தை சமூகவியல் கண்ணோட்டத்துடன் தகழி தம் படைப்புகளில் அணுகுகிறார்".

துப்புரவு தொழிலாளர்களுக்கு வேறு விதமான தொற்று நோய்களும் தாக்கின. அதன் விளைவாய்த் தோட்டியின மக்கள் 40 - 60 வயதுக்குள்ளேயே தங்கள் வாழ்க்கைப் பயணத்தை முடித்துக் கொண்டனர். அத்தொற்று நோயினை தடுப்பதற்கான வழிமுறைகள் தலித் மக்களுக்கு என்று செய்யப்படாமையால் தலித் மக்கள் தவித்தனர். சங்கம் வைத்துக்கொள்ள உரிமை இல்லை. அப்படியே சங்கத்தை ஏற்படுத்தினாலும் அதனை மேல்தட்டில் இருக்கும் அதிகார வர்க்கத்தினர் கலைத்தனர். நாவலின் நிரந்தர ஊதியம் கூட பாதிபணத்தினை அதிகார பெருசாலிகளின் ஊழல் செய்யும் நிலை நாவலில் நீரோட்டமாக அமைந்துள்ளது தலித் மக்கள் அன்றாட வாழ்க்கையிலும் நிம்மதியான வாழ்க்கை வாழவில்லை.

**தோட்டிகளின் சமுதாய நிலை**

இது சமூகத்தில் பெரும் அதிர்வுகளை ஏற்படுத்திய நாவல்.

சமுதாயத்தில் சாதாரணமாக நடத்தப்படும் அநீதிகளை ஆணித்தரமாக புரிய வைக்கும் நாவலாக தோட்டியின் மகன் உள்ளது. தோட்டிகள் எவ்வாறெல்லாம் ஏமாற்றப்படுகின்றனர், எவ்வாறெல்லாம் அசிங்கப்படுத்தப்படுகின்றனர் என தெளிவாக எடுத்து இயம்புகிறது

"பணக்காரன் வயிறு தெரியாம தின்பான்
சீரணமாவாது
ஏழைகள் கண்டதையும், கெடச்சதையும்
திம்பாணுங்க
அவங்களுக்கும் சீரணமாவாது"

இது நாவலின் நெற்றியடி வசனமாகும். மலக்கிடங்கில் தோட்டிகளின் இடையில் நடக்கும் விவாதத்தில் வரும் வசனமாகும் எவ்வளவு பொருள் பொதிந்த உண்மையாக இருக்கிறது.

"தினசரி காலையில் மட்டும் தான் நகரசுத்தி தொழிலாளியின் நினைவு செல்வர்களுக்கு இருக்கும் மற்ற சமயங்களில் அவர்கள் அவனை மறந்து விடுவார்கள். ஒரு நகரசுத்தி தொழிலாளியின் உழைப்புக்கு ஈடாக இரண்டு தோசைகளும் ஒரு கப் காப்பியும் மதிக்கப்படுகின்றன".

“தொழிலாளர்களை மனித உயிர்கள் என்று கருதாமல் பொருள்களாக மதிப்பிடும் செல்வர்களின் போக்கு நகர சபைக்கு தலைவர் படைப்பின் வாயிலாக காட்டப்படுகின்றது. நகர சுத்தி தொழிலாளர்கள் என்றைக்கும் தொழிலாளர்களாகவே இருக்க வேண்டும்? கல்வியறிவோ, அறிவு வளர்ச்சியோ வந்து விடக்கூடாது என்பதில் செல்வர்கள் கவனமாக இருக்கின்றனர்”.

பிச்சைக்காரன் பிச்சைபெற செல்லும்போது அவனது கூப்பாட்டை விடவும் அவனது தோற்றம் முக்கியமானதாகிறது. பாத்திரம் அறிந்து பிச்சை போடவே பெரும்பாலானோர் எண்ணுகின்றனர். நாற்றுத்துடன் வேலை செய்யும் ஒருவருடைய தோற்றம் மாறவோ அவர்களுடைய நிலையில் முன்னேற்றம் காண்பது அவர்களுடைய எஜமானர்கள் எண்ணுவதில்லை. சமுதாயத்தின் குறை கூறுவதற்கு போதுமான சான்றுகளில்லை.

**கல்வியில் தலித் மக்களின் நிலை:**

“எண்ணென்ப ஏனை எழுத்தென்ப இவ்விரண்டும்
கண்ணென்ப வாழும் உயிர்க்கு. (குறள் - 392)

என்ற குறள் மனிதனுக்கு எண்ணும் எழுத்தும் கண்கள் என்கிறார் வள்ளுவர். கல்வி என்பது தோட்டி மக்களுக்கே எட்டாக் கனியாகவே இருந்தது.

“சுடலையின் மகன் மோகன் அவனை பள்ளியில் சேர்க்க எண்ணினான் பள்ளியில் சேர்ப்பதற்கு ஒரு நாள் மதியத்திற்கு மேல் சுடலைமுத்து அங்கு போனான்

“நீ அந்த சேட்டு வியாபாரி வீட்டுக்கு
அடுத்தாப்லெ தோட்டி தானே?
ஆமா?
ஆசிரியர் சற்று கௌரத்தோடு கேட்டார்.
உன் பையனை இங்கே தான் படிக்க வைக்கணும் என்று ஏன் நினைத்தாய்?”

அவன் குழந்தைக்கு பள்ளியில் நுழைய முடியாதன் காரணம் அவனுக்கு தெரிந்தது அவன் தோட்டியின் மகன் அதுதான்.

“தோட்டி தன் குழந்தையை பள்ளியில் படிக்க வைத்தான் என்பது இதுவரை நடந்திராத விஷயம் தோட்டியின் குழந்தையை பள்ளியில் சேர்த்து கொள்வதில்லை. எழுதி வைக்கப்படாத அந்த சட்டத்தை எப்படி உடைப்பது?“

நீயோ தோட்டியின் மகன் எப்படி மேல் தட்டு மக்களின் குழந்தைகள் படிக்கும் பள்ளியில் படிக்க முடியும் என்றார் தன் குழந்தையை சுடலை மற்றொரு பள்ளிக்கு அழைத்துச் சென்றார். அங்கு ஒரு காரணம் கூறி பள்ளியில் இடமில்லை என்று துரத்தினர். பின்னர் மற்றொரு பள்ளிக்கு தன் மகனை அழைத்துச் சென்றான்.அப்பள்ளியில் இரண்டு நிபந்தனை களுடன் சேர்த்தனர் அது என்னவென்றால் குழந்தையின் பெற்றோர் பெயருக்கு பதிலாக வேறொருவர் பெயரை போட வேண்டும் “ என்றனர். ஏனெனில் தோட்டி மக்களுக்கு கல்வி மறுக்கப்பட்டு இருந்தது என்பதை நாவல் வழி அறிய முடிகின்றது.

**இன்றைய சூழலில் துப்புரவு பணியாளர்களின் நிலை**

நாவல் எழுதப்பட்ட காலகட்டத்திற்கு பின் பல மாறுதல்கள் ஏற்பட்டுள்ளன. அதில் பல தோட்டிகள் முன்னேற்றம் அடைந்துள்ளனர் என்பதற்கு உதாரணங்களும் கூறப்படுகின்றது.

2018 நீட் தேர்வில் வெற்றி பெற்ற சுதாகர் (நெல்லை மாவட்டம்) ஒரு துப்புரவு தொழிலாளியான பாஸ்கரின் மகன் என்பது தமிழகத்தில் சிறந்து சம்பவம் குடும்பத்தின்

முயற்சியும், மாணவனின் பயிற்சியும், அதற்கான அங்கீகாரமும் மெய்சிலிர்க்க வைக்கும் செய்திகளாக உள்ளது.

தோட்டியாக தகுதி தேவையில்லை. குடும்ப பாரம்பரியத்தில் அத்தொழில் இருந்தாலோ? குடும்பம் அற்று இருந்தாலோ? தோட்டியாகலாம் என்ற எண்ணம் காணப்படுகின்ற சூழலில் நன்கு ஆரம்பக் கல்வி பெற்ற மோகனுடைய வாழ்க்கையும் அவ்வேலையையே சுற்றி வந்தது. எனவே தோட்டி என்னும் தொழிலுக்கு தகுதி ஒரு தடை இல்லை என்று நமக்கு தெளிவாகிறது.

இது தற்போது சாத்தியமே அரசாங்கம் துப்புரவு பணியாளர்களை தேர்வு செய்கிறது. தகுதிகள், வரையறைகள், விடுமுறைகள், ஓய்வூதியங்கள் என பலவற்றை உள்ளடக்கையை அரசாங்க பணியாக உள்ளது. சமீபத்தில் துப்புரவு பணியாளர் விருப்பத்திற்கு பொறியியல் படித்த ஒரு பெண்மணி விண்ணப்பித்திருந்த செய்தி பெரும்பாலானோரை ஆச்சரியத்தில் ஆழ்த்தியது இது ஒரு பரபரப்பான செய்தியானது.

அதேபோல் துப்புரவு பணியாளர்கள் வாழ்நாள் முழுவதும் அவ்வாறே இருப்பர் என்று கூற்றை தகர்க்கும் வகையில் விருதுநகர் மாவட்டத்தில் உள்ள திருவில்லிபுத்தூர் தாலுகாவில் கான்சாபுரம் ஊராட்சி மன்ற தேர்தலில் பஞ்சாயத்து தலைவராக வெற்றி பெற்றுள்ளார். அதே பஞ்சாயத்தில் துப்புரவு பணியாளராக முயற்சியும், அப்பகுதி மக்கள் சரஸ்வதி அவர்களின் முயற்சியும் அப்பகுதி மக்கள் சரஸ்வதி மீது கொண்டுள்ள தன்னம்பிக்கையும் அனைவரும் அறிய வேண்டிய செய்தி.

கதையில் 'வைசூரி' 'காலரா' என்னும் நோய் காணப்படுகிறது. துப்புரவு பணியாளர் பகுதிகளில் நோய்கள் எளிதாக பரவுகின்றன. குறிப்பாக தூய்மையற்ற குடிநீர், உணவு முதலியவற்றை பரவும் நோய்களை தடுப்பது மிகவும் கடினமே கதையில் பல முக்கிய பாத்திரங்களை எளிதில் விழுங்கி விட்டவை நோய்களே. சமீபத்தியல் 2022க்குள் துப்புரவு பணியாளர்களுக்கு வீடு வழங்க தேசிய துப்புரவாளர்கள் மறுவாழ்வு ஆணையம் திட்டமிட்டுள்ளது. மறுவாழ்வுத்திட்டம் (டிசம்பர் 11, 2018) அதன் பின்பு, மாதம் ஒருமுறைமருத்துவ முகாம் நடத்தி முழு உடல் பரிசோதனை செய்யவும் ஆனை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

**தொகுப்புரை:**

- தாழ்த்தப்பட்ட சாதி என்பதாலும் துப்புரவாளர்கள் என்பதாலும் இந்த சமூகத்தில் உள்ளவர்களால் ஒதுக்கி வைக்கப்படுகின்றனர்.
- இசக்கிமுத்து, சுடலை, பிச்சாண்டி இவர்கள் அனைவரும் தோட்டித் தொழிலினை நம்பி வாழ்கின்றனர்.
- தனது மகன் தோட்டி என்னும் இழிவான இந்த சமுதாயத்தில் வாழ்ந்து வரக்கூடாது என்று சுடலையின் அபிப்பிராயத்தையும் நம்மால் அறிந்து கொள்ள முடிகிறது.
- இன்றைய காலகட்டத்தில் தோட்டி சமுதாயம் பிற சமுதாயத்திற்கு உரிய அனைத்து உரிமைகளையும் பெற்றுள்ளனர் என்பது இந்த 'தோட்டியின் மகன்' என்னும் மொழி பெயர்ப்பு நாவலின் வழி உணர முடிகிறது.

### துனை நுற்பட்டியல்

**முதன்மை ஆதாரம்:**


1. சுந்தர ராமசாமி - தோட்டியின் மகன்,
காலச்சுவடு பதிப்பகம்,
மூன்றாம் பதிப்பு,
நாகர்கோவில் 629001


**துணை ஆதாரங்கள்:**


1. அகிலன் — கதைக்கலை,
பாரி புத்தகப் பண்ணை,
சென்னை.
மு.ப — 1972.

3. இராஜம் கிருஷ்ணன் - காலந்தோறும் பெண்மை,
தாகம் பதிப்பகம்,
சென்னை,
மு.ப — 1991.

5. கைலாசபதி - தமிழ் நாவல் இலக்கியம்
பாரிநிலையும்
சென்னை
மு.ப - 1999

அரண் பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்

ARAN International e-Journal of Tamil Research

# அரண்

பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்

## அறிவிப்பு / Announcement

அன்பான தமிழ்ச் சொந்தங்களே

வணக்கம்.

வரும் 2025, ஏப்ரல் மாதம் வெளிவரும் அரண் பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழுக்கான ஆய்வுக் கட்டுரைகள் ஆய்வாளர்களிடமிருந்து வரவேற்கப்படுகின்றன.

கட்டுரை வந்து சேர வேண்டிய கடைசி நாள்- ஏப்ரல் 10. அதற்கு பின் வரும் கட்டுரைகள் ஏப்ரல் இதழில் இடம்பெறாது என்பதை தெரிவித்துக் கொள்கிறோம்.

www.aranejournal.com